அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 177

எனது இல. 2/9/771(எச்)
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
1980, ஒகத்து மாதம் 22ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க மன்றத் தலைவர்கள் யாவர்க்கும்.

1. லீவு மீட்டளித்தல்
2. நிவாரணம் கோரும் விண்ணப்பம்.

"உத்தேச வேலை நிறுத்தம்–யூலை, 1980" என்னும் விடயம் பற்றிய 1980, யூலை மாதம் 17ஆந் தேதியிட்ட 167ஆம் இலக்கச் சுற்றறிக்கையைத் தொடர்ந்து, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்க மன்றங்களின் பணியாளர்களுக்கும் லீவு வழங்குவது பற்றிய மட்டுப்பாடு அகற்றப்பட்டுள்ளது.

02. "நிவாரணம் கோரி மேதகு சனாதிபதி அவர்களுக்குக் குடும்பன் கள் செய்த மேன்முறையீடு" என்னும் விடயம் பற்றிய 1980.08.19ஆந் தேதியிட்ட 176ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையைத் தொடர்ந்து, தமது பதவியை விட்டு நீங்கியவர்களான அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க மன்றங்களின் பணியாளர்கள் யாவரும் 176ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 02ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாகக் கிடைக்கத்தக்கதாகச் செய்யப்படும் படிவத்தில் விண்ணப்பத்தைச் செய்தல் வேண்டுமென்றும், ஒவ்வொரு மாண்புமிகு அமைச்சரும் குறித்த படிவங்களை ஆய்ந்து பார்த்த பின்னர் தமது விதப்புரைகளை அமைச்சரவைக்குத் தெரிவித்தல் வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒப்பமிட்டவர்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.